# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 05 வியாழக்கிழமை 19.06.2025 கதிர் 230



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel








## வலிகாமம் மேற்கு சபையை கைப்பற்றியது தமிழரசுக் கட்சி

### தவிசாளராக சண்முகநாதன் ஜெயந்தன் தெரிவு

வலிகாமம் மேற்கு, ஜூன் 19

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சண்முகநாதன் ஜெயந்தன் தெரிவானார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான

7

# எந்தவொரு தரப்புடனும் எமக்கு ‘டீல்’ கிடையாது!

### அநுர அரசாங்கத்தின் ஒடுக்குமுறையை எதிர்கொள்ளத் தயார் என்கிறார் நாமல்



கொழும்பு, ஜூன் 19

“எமக்கு எந்தவொரு தரப்புடனும் ‘டீல்’ கிடையாது. அநுர அரசின் ஒடுக்குமுறைக்கு முகங்கொடுக்கத் தயார். எமது அரசியல் பயணத்தை நிறுத்தப்போவதில்லை.” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வெளிப்படையான அரசியலையே முன்னெடுக்கின்றது. எமக்கு எந்தவொரு தரப்புடனும் ‘டீல்’ கிடையாது. நாம் தனிநபர்களுடன் பேச்சு நடத்தமாட்டோம். கட்சிகளுடன்தான் எமக்குக் கொடுக்கல், வாங்கல் உள்ளது.

7

## சங்குக் கூட்டணி உறுப்பினர் கட்சியிலிருந்து இடைநிறுத்தம்



யாழ்ப்பாணம், ஜூன் 19

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிலைப்பாட்டுக்கு மாறாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை வாக்களிப்பின் போது செயற்பட்ட கட்சி உறுப்பினர் ஒருவர், கட்சி உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அவரிடம் விளக்கமும் கோரப பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற

7

## காரைநகர் பிரதேச சபையின் அதிகாரம் ‘சுயேச்சைக் குழு’ – ‘சைக்கிள்’ – ‘மான்’ வசம்

### தவிசாளராகக் கிருஷ்ணன் கோவிந்தராஜன் தெரிவு



யாழ்ப்பாணம், ஜூன் 19

சுயேச்சைக் குழு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன இணைந்து யாழ். காரைநகர் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளன.

அதற்கமைய காரைநகர் பிரதேச சபையின் தவிசாளராகச் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த கிருஷ்ணன் கோவிந்தராஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

7

## வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் தமிழரசு வசம்!

### மீண்டும் தவிசாளரானார் பிரகாஷ்



வலிகாமம் தெற்கு, ஜூன் 19

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா பிரகாஷ் தெரிவானார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று பிற்பகல் வலிகாமம் தெற்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

31 உறுப்பினர்களைக் கொண்ட

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தொடர்பில் அவதூறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 19

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஜெர்மன் விஜயத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரைச் சந்தித்தாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தி நீதிமன்றத்திற்கு அறிக்கை அளிக்குமாறு கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் ஜி. சுபாஷ் சமிந்த ரோஷன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, இது தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பரிசீலித்த பின்னர், கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ஜனாதிபதி குறித்து முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில கூறிய தகவலானது அரசாங்கத்தை சங்கடப்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

இதன்படி சம்பவம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்ட நீதவான், விசாரணையின் முன்னேற்றத்தை நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவும் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாகை – காங்கேசன்துறை கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்!

*சீரற்ற வானிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாகை – இலங்கையின் காங்கேசன்துறைக்கு இடையிலான கப்பல் சேவை நேற்று (18) மீண்டும் ஆரம்பமானதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*கடந்த 2023 ஒக்டோபர் முதல் இந்தியாவின் நாகை துறைமுகத்திலிருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு 'சுபம்' என்ற தனியார்நிறுவனம் மூலம் 'சிவகங்கை' பயணிகள் கப்பல் சேவை இயக்கப்பட்டு வருகின்றது.*

*சீரற்ற வானிலை நிலவும் சந்தர்ப்பங்களில் குறித்த கப்பல் சேவை நிறுத்தப்படுவது வழக்கம். அதே போல கடந்த ஜூன் 13ஆம் திகதி முதல் கப்பல் சேவை நிறுத் தப்பட்டது.*

*தற்போது நிலவும் சாதகமான காலநிலையினால் காங்கேசன்துறைக்கு கப்பல் சேவை நேற்று (18) காலை வழக்கம்போல் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.*

*இதைத்தொடர்ந்து, சிவகங்கை கப்பல் 95 பயணிகளுடன் புறப்பட்டு காங்கேசன்துறைக்கு சென்றடைந்தது. பின்னர், இலங்கையிலிருந்து 108 பயணிகளுடன் பிற்பகல் புறப்பட்ட கப்பல் மாலையில் நாகை துறைமுகத்துக்கு திரும்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.*



# ரயிலுடன் கார் மோதி விபத்து

*மட்டக்களப்பு, ஜூன் 19*

*மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூழாவடி பகுதியில் உள்ள ரயில் கடவையில் கார் ஒன்று ரயிலுடன் மோதுண்ட நிலையில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.*

*கூழாவடியில் உள்ள ரயில் கடவையில் ரயில் செல்லும் நேரத்தில் மூடப்படாத நிலையில் அதன் ஊடாக கடக்க முனைந்த கார் ஒன்றே இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளது.*

*இதன்போது காரை செலுத்திச்சென்றவர் படுகாயமடைந்துள்ள நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*ரயில் கடவையில் கடமையாற்றும் ரயில் கடவையாளர் இன்மையினால் தொடர்ச்சியாக கடவை ஊடாக பயணிப்பவர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றனர்.*

*இது தொடர்பில் பல தடவைகள் ஊடகங்கள் வாயிலாக கொண்டுவரப்பட்டபோதிலும் இதுவரையில் நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.*

*(ஐ)*

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய
இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கக் கோரி ஆர்ப்பாட்டம்





மூதூர், ஜூன் 19

மூதூர் கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர், பௌதீக வள பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி பாடசாலை மாணவர்களின் பெற்றோர் வியாழக்கிழமை (19) அன்று காலை பாடசாலைக்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முக்கிய பாடங்களைக் கற்பிப்பதற்கான கணித, வர்த்தகம், சிங்களம்,சமயம், I.C.T-ஆசிரியர் இன்மை, பௌதீக வளங்கள் இன்மை, போன்ற பிரச்சினைகளை சீர் செய்து தருமாறு கல்வி நிருவாகத்தின ரிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்த ஒரு தீர்வும் கிட்டவில்லை.

ஆதலால் குறிப்பிட்ட பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இதனை நிவர்த்தி செய்து தருமாறு கோரியே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் சுலோகங்களை ஏந்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# இந்தியா – இலங்கை சுற்றுலா மாநாடு 2025




இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாணத்தில்புதன்கிழமை (18) அன்று யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாச்சார மையத்தில் சுற்றுலா மாநாடு 2025 ல் கலப்பு முறையில் (நேரடியாகவும் ஆன்லைனாகவும்) வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது.

இந்த மாநாடு, பங்குதாரர்களிடையே கலந்துரையாடல்களை செயல்படுத்துவதன் மூலம், தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கு, சுற்றுலா மேம்பாட்டு முயற்சிகளை ஆதரிப்பதன் மூலம் இந்தியாவிற்கும் இலங்கையின் வட மாகாணத்திற்கு இடையிலான சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

2. இந்த மாநாட்டை இந்திய துணைத் தூதுவர், சாய் முரளி மற்றும் வட மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் அ. பத்திநாதன் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தார். தனது தொடக்க உரையில், இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, இந்தியாவையும் இலங்கையையும் இயற்கையாகவே இணைக்கும்வரலாற்று, கலாச்சார மற்றும் புவியியல் ரீதியான அண்மைத்தன்மையை வலியுறுத்தினார்.

இது இருதரப்பு உறவில் சுற்றுலாவை ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது என்றார். இணைப்பு என்பது சுற்றுலாவின் அடிப்படையாக அமைகிறது என்று குறிப்பிட்ட அவர், சமீபத்தில் மீண்டும் தொடங்கப்பட்ட நாகப்பட்டினம்-காங்கேசன்துறை படகு சேவை, சென்னை-யாழ்ப்பாணம் மற்றும் சென்னை-திருச்சி விமான இணைப்புகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இலங்கையின் சுற்றுலா மேம்பாட்டிற்கு இந்தியாவின் ஆதரவு மேலும் அடிக்கோடிட்டுக் காட்டிய துணைத் தூதுவர், அனைத்துப் பங்கேற்பாளர்களும் தீவிரமாகப் பங்கேற்கவும், சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்ளவும், இலங்கையின் வட மாகாணத்தின் முழு சுற்றுலா திறனையும் வெளிக்கொணர ஒத்துழைப்புக்கான புதிய வழிகளை ஆராயவும் ஊக்குவித்தார்.

3. இந்த மாநாட்டில், நாகப்பட்டினம் பிரதிநிதிகள் குழுவின் (தமிழ்நாடு) விளக்கக்காட்சிகள் இடம்பெற்றன. இது படகு இணைப்பு மூலம் சாத்தியமான சுற்றுலா ஒத்துழைப்பில் கவனம் செலுத்தியது.

இதைத் தொடர்ந்து, பல்வேறு இந்திய மாநில மற்றும் யூனியன் பிரதேச சுற்றுலா வாரியங்களான தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகியவற்றின் விரிவான விளக்கக்காட்சிகள், அந்தந்த சுற்றுலா நிலப்பரப்புகள் மற்றும் கூட்டுறவுக்கான வாய்ப்புகள் குறித்த நுண்ணறிவுகளை வழங்கின.

4. மேலும், மாநாட்டில் இந்திய சுற்றுலாத் துறையின் முக்கிய பிரமுகர்களின் அறிவு பகிர்வு விளக்கக்காட்சிகள் இடம்பெற்றன. தென்னிந்திய வர்த்தக சம்மேளனத்தின்(சுற்றுலா) தலைவர் திரு. சிகரன் பாலன், மாறிவரும் சுற்றுலாத் துறை மற்றும் அதன் சமீபத்திய போக்குகள் குறித்த நுண்ணறிவுகளை வழங்கினார்.

டிராவல் ஏஜென்ட்கள் அசோசியேஷன் ஆஃப் இந்தியாவின்(தென் பிராந்தியம்)தலைவர் டி. தேவகி, சுற்றுலாத் துறையில் தனது அனுபவத்தையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொண்டார். இறுதியாக, இந்திய சுற்றுலா ஆபரேட்டர்கள் சங்கத்தின் (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி) தலைவர் கே. பாண்டியன், உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கினார். (ஐ)

# ஸ்டார்லிங் இணைய சேவை இலங்கையில் விரைவில் ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 19

இந்தமாத இறுதியில் செயற்கைக்கோள் இணையச் சேவையான ஸ்டார்லிங் இலங்கையில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாடு முழுவதும் பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஏற்கனவே நடந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்டார்லிங் சேவை மூலம் அதிவேக செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைப்பை வழங்குவதன் மூலம், இலங்கையின் தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் இணைய அணுகல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# குளவி கொட்டியதில் 12 தொழிலாளர்கள் படுகாயம்



கொழும்பு, ஜூன் 19

கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் குழு ஒன்று குளவிகளால் தாக்கப்பட்டதாகவும், 09 பெண்கள் மற்றும் 03 ஆண்கள் உட்பட 12பேர்பொகவந்தலாவ மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் மருத்துவமனையின் மாவட்ட மருத்துவ அதிகாரி இ.எஸ்.கே. ஜெயசூரியா தெரிவித்தார்.

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்கு கீழுள்ள பொகவந்தலாவ தோட்டத்தில், வியாழக்கிழமை (19) தேயிலை செடிகளுக்கு இடையில் கட்டப்பட்டிருந்த குளவி கூடு மீது, தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த ஒரு பெண் தோட்டத் தொழிலாளியின் கால் மோதியதை அடுத்து, குளவிகள் கலைந்து கொட்டியுள்ளன.

நிலவும்மோசமான வானிலை காரணமாக, தேயிலைத் தோட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான குளவிகள் கூடு கட்டி உள்ளன, தோட்டத் தொழிலாளர்கள் மீது அதிக எண்ணிக்கையிலான குளவிகள் கொட்டி உள்ளமையால், தேயிலை கொழுந்து பறிப்பதை நிர்வாகம், வியாழக்கிழமை (19) நிறுத்தியுள்ளது (ஐ)

# குஜராத்தில் கனமழை, வெள்ளம் 48 மணி நேரத்தில் 22 பேர் உயிரிழப்பு

குஜராத்தில் பெய்த கனமழை, வெள்ளம் காரணமாக, கடந்த 48 மணி நேரத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். மீட்பு பணிகளை தேசிய பேரிடர் மீட்பு படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குஜராத்தில் மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வருகிறது. மாநிலம் முழுவதும் பெய்து வரும் கனமழையால் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. ஜூனாகத், துவாரகா, போர்பந்தர், அம்ரேலி, ராஜ்கோட், பாவ்நகர், கட்ச், வல்சாத், காந்திநகர், சூரத் மற்றும் படான் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதியில் இருக்கும் மக்களுக்கு மீட்பு படையினர் உதவி செய்து வருகின்றனர்.

பொடாட் மாவட்டத்தில் ஒரு கார், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதில் நான்கு பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் மாயம் ஆகி உள்ளனர் என தேசிய பேரிடர் மீட்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கனமழை, வெள்ளம் காரணமாக, கடந்த 48 மணி நேரத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். முன்னெச்சரிக்கையாக, குஜராத்தின் பாவ்நகர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகள் மூடப்பட்டுள்ளன

பாதிக்கப்பட்ட 25 மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்யுமாறு

குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ)



# ‘ஏர் இந்தியா’ விமான விபத்து இன்சூரன்ஸ் வழங்குவதில் சிக்கல்

‘ஏர் இந்தியா’ விமான விபத்தில் உயிரிழந்தோருக்கான காப்பீட்டு தொகையை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

குஜராத்தின் ஆமதாபாதில், ஏர் இந்தியா விமானம் கடந்த, 12ல் விபத்துக்குள்ளானதுமே இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம், காப்பீட்டு நிறுவனங்களுக்கு உத்தரவு ஒன்றை பிறப்பித்தது.

அதில், வெளிநாட்டு மருத்துவக் காப்பீடு, தனிநபர் விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கொள்கைகளை வழங்குவது குறித்த தங்களின் தரவுகளுடன், இறந்தவர்களின் விபரங்களைச் சரிபார்க்கும்படி கேட்டுக் கொண்டது.

மேலும் விமான விபத்தில் உயிரிழந்தோருக்கான காப்பீடை வழங்குவதில் எந்த நடைமுறை சிக்கலோ, தாமதமோ இருக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தியது.

அதன்படி, எல்.ஐ.சி., நியூ இந்தியா அஷ்யூரன்ஸ், எச்.டி.எப்.சி., லைப், இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ், பஜாஜ் அலையன்ஸ் ஜி.ஐ.சி., மற்றும் டாடா ஏ.ஐ.ஜி., இன்சூரன்ஸ் போன்ற முக்கிய காப்பீட்டு நிறுவனங்கள், ஆமதாபாத் சிவில் மருத்துவமனையில் தங்கள் உதவி மையங்களை அமைத்துள்ளன.

காப்பீடு செய்தவர் இறந்தால், அவர் நாமினியாக பரிந்துரைத்தவரிடம் இழப்பீடு தொகை ஒப்படைக்கப்படுவது வழக்கம்.

ஆனால், ஆமதாபாத் விபத்தில், கணவர் இறந்த நிலையில், நாமினியான மனைவியும் இறந்துவிட்டதால், பணத்தை யாரிடம் ஒப்படைப்பது என்ற குழப்பத்தில் காப்பீடு நிறுவனங்கள் உள்ளன.

காப்பீடு செய்தவரும், நாமினியும் இறந்ததால் வாரிசு போன்ற ரத்த சொந்தங்களை தேடி பணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக இன்சூரன்ஸ் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒன்றுக்கும் மேற்பட்ட வாரிசுகள் இருப்பின், கூட்டாக அனுமதி பத்திரம் பெற்று, ஒருவரிடம் காப்பீடு தொகை வழங்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

விமான விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினர் அந்த துயரத்தில் இருந்து இன்னும் மீளவில்லை. இதனால், காப்பீடு தொகைக்கான ஆவணங்களை பெரும்பாலானவர்கள் சமர்ப்பிக்கவில்லை என்று இன்சூரன்ஸ் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# உடனடியாக எந்த முடிவுக்கும் வர முடியாது ஏர் இந்தியா விபத்துக்கு வருத்தம் தெரிவித்த டாடா குழு தலைவர்



274 பேரை பலி கொண்ட ஏர் இந்தியா விமான விபத்துக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்வதாக டாடா குழுமத்தின் தலைவர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் 12ம் தேதி ஆமதாபாத்தில் இருந்து லண்டன் நோக்கி சென்ற ஏர் இந்தியாவின் போயிங் விமானம் 787-8 ட்ரீம்லைனர், புறப்பட்ட சில வினாடிகளில் மருத்துவ கல்லூரி விடுதியின் மீது விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், 274 பேர் பலியாகினர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 கோடி நிவாரணத்தை டாடா குழுமம் அறிவித்துள்ளது. உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு டி.என்.ஏ., பரிசோதனை செய்யப்பட்டு, அவரவர் உறவினர்களிடம் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன.

இந்த விபத்து குறித்து மத்திய அரசின் உயர்மட்ட குழு விசாரணை நடத்தி வரும் நிலையில், ஏர் இந்தியா விபத்துக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்வதாக டாடா குழுமத்தின் தலைவர் சந்திரசேகரன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது இந்த கடினமான தருணத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் ஆறுதலளிக்க சொல்ல வார்த்தைகள் இல்லை. டாடா குழுமத்தின் விமானம் விபத்துக்குள்ளாகி இருப்பதற்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள். இந்த சமயத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு உறுதுணையாக இருப்பதுடன், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகிறோம்.

விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து அறிய, விசாரணை முடியும் வரை காத்திருக்க வேண்டும். விமான விபத்துக்குள்ளான பிறகு, மனித தவறுகள், விமானத்தின் இன்ஜின், பராமரிப்பு குறித்த ஊகங்கள் எழுந்துள்ளன.

இருப்பினும், இந்த விமானம் குறித்து எனக்கு தெரிந்த தகவல் என்னவென்றால், வலதுபுற இன்ஜின் கடந்த மார்ச் மாதம் தான் புதிதாக பொறுத்தப்பட்டுள்ளது. இடதுபுற இன்ஜின் 2023ல் கடைசியாக சர்வீஸ் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு டிசம்பர் மாதம் தான் அடுத்த சர்வீஸ் செய்யப்பட உள்ளது. எனவே, இரு இன்ஜின்களும் சிறப்பாகவே இருந்துள்ளன.

அதேபோல, கேப்டன் சபர்வால் 11,500 மணிநேரமும், சக விமானி குந்தர் 3,400க்கும் கூடுதலான மணிநேரமும் விமானத்தை இயக்கிய அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் இருவரும் சிறப்பான விமானிகள் என்று சக விமானிகள் மூலம் அறிந்துள்ளேன். எனவே, உடனடியாக எந்த முடிவுக்கு நாம் வர முடியாது. பிளாக் பாக்ஸ் மற்றும் பதிவான தரவுகளின் அடிப்படையில் தான் நாம் ஒரு முடிவுக்கும் வர முடியும். எனவே, அதுவரையில் காத்திருப்போம்.

பாதுகாப்பு குறைபாடுகள் இருந்தால், விமானத்தை பறப்பதற்கு விமானப் போக்குவரத்துத்துறை அனுமதிக்காது, இவ்வாறு கூறினார். (ஐ)

# விமான விபத்தில் உயிர் தப்பியவர் ‘டிஸ்சார்ஜ்’



குஜராத், ‘ஏர் இந்தியா’ விமான விபத்தில் உயிர் தப்பிய பயணி, மருத்துவமனையில் இருந்து ‘டிஸ்சார்ஜ்’ செய்யப்பட்டார். அதே விபத்தில் இறந்த அவரது சகோதரரின் இறுதிச்சடங்கு டையூவில் நேற்று நடந்தது. இதில், அவர் பங்கேற்றார்.

குஜராத்தின் ஆமதாபாதில் நடந்த ‘ஏர் இந்தியா’ விமான விபத்தில், 241 பேர் உயிரிழந்தனர். விமானம் மோதிய கல்லூரி விடுதியில் மருத்துவ மாணவர்கள் ஐந்து பேர் உட்பட 29 பேர் பலியாகினர்.

இதில், ஐரோப்பிய நாடான பிரிட்டன் குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவளியான விஸ்வாஸ் குமார் ரமேஷ், 40, என்ற பயணி மட்டும் உயிர் தப்பினார்.

விபத்து நிகழ்ந்த இடத்தில் இருந்து காயங்களுடன் தப்பி வந்த அவரை, மீட்புக்குழுவினர் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கு டாக்டர்கள் அளித்த சிகிச்சையின் காரணமாக உடல்நலம் தேறிய விஸ்வாஸ் குமார், நேற்று முன்தினம் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். இதற்கிடையே, அதே விமான விபத்தில், உயிரிழந்த அவரது சகோதரர் அஜயின் உடல், மரபணு பரிசோதனை வாயிலாக நேற்று கண்டறியப்பட்டு, அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதையடுத்து, விஸ்வாஸ் குமார் மற்றும் அவரது குடும்பத்தினர், குஜராத்தில் உள்ள தங்கள் சொந்த ஊரான டையூவிற்கு அஜயின் உடலை நேற்று எடுத்துச் சென்று தகனம் செய்தனர். அங்கு நடந்த தன் சகோதரரின் இறுதிச்சடங்கில் விஸ்வாஸ் குமார் பங்கேற்றார். (ஐ)



# கற்பதும் மறப்பதும் அவசியம்!

–ஜானு

கற்றுக்கொள்வது கடினமானதன்று. கற்றுக்கொண்ட விஷயம் தவறு என அறிந்தவுடன், அதை மனதில் இருந்து விலகச் செய்வதுதான் கடினம். ழூமார்ட்டின் ஃபிஷர்

இந்தப் பூமியில், எல்லா உயிர்களும் கற்றுக்கொள்கின்றன. பறவைகள் கூடுகட்டவும் முட்டையிட்டு அடைகாக்கவும் கற்றுக்கொள்கின்றன. மாமிச உண்ணிகள், பிற விலங்குகளை வேட்டையாடக் கற்றுக்கொள்கின்றன. தாவர உண்ணிகள், எந்தெந்த தாவரத்தை உண்ணலாம் எனக் கற்றுக்கொள்கின்றன.

எல்லா விலங்குகளும் தங்களுக்கு வரும் அபாயங்களிலிருந்து தங்களைப் பாதுகாக்கவும் கற்றுக்கொள்கின்றன. இப்படி ஒவ்வொரு விலங்கும் தான் வாழ்வதற்குத் தேவையானவற்றை, அவற்றிற்குரியவற்றை மட்டும் கற்றுக்கொண்டு, அதை வாழ்தலுக்குப் பயன்படுத்திக்கொள்கின்றன.

ஆனால். மனிதன் அப்படியல்ல, மனிதனுக்கு இதைத்தான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இல்லை. தனக்குத் தேவை இல்லாததையும் கற்றுக்கொள்கிறான். தெரிந்தோ தெரியாமலோ தன்னுடைய வளர்ச்சிக்குத் துணைபுரியாத விஷயங்களையும் தன்னுடைய நலனுக்கு உதவாத, தனக்கு மகிழ்ச்சியைத் தராத விஷயங்களையும் கற்றுக்கொள்கிறான். மேலும் அவ்வாறு கற்றுக்கொண்டதை மறப்பதும் மனிதனுக்கு எளிதாக இல்லை.

அந்தக் குடும்பம் ஒரு நகரத்தில் வாழ்ந்துவந்தது. அப்பாவும் அம்மாவும் பிள்ளைகள் நலனில் அக்கறை உள்ளவர்களாகவே இருந்தார்கள். அவர்களின் குழந்தை, பானுவுக்கு ஆறு வயது. அது நகரம் என்பதால், அவர்கள் வீட்டில் தங்கியிருந்து படிப்பதற்காக, கிராமத்தில் இருந்து அவர்களது உறவுக்கார இளைஞன் வருகிறார்.

அந்த உறவுக்கார இளைஞனால், அந்தக் குழந்தை பாலியல்ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகிறாள். குழந்தை சென்று தாயிடம் முறையிடுகிறாள். தாயின் அறியாமையினால், கிராமத்துக்காரன் எல்லாம் உத்தமன் என்ற எண்ணத்தில் குழந்தையிடம், “இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? சின்ன புள்ள,சின்ன புள்ள மாதிரி பேசு” என அதட்டுகிறார்.

குழந்தைக்கு அம்மாவின்மீது கோபமும் வெறுப்பும் வருகிறது.

சில மாதங்களுக்குப் பிறகு, ஒரு திருமணத்திற்காக உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து வெளியூர் போக நேர்கிறது. அப்போது, காரில் இடம் இல்லாததால், அந்தக் குழந்தையை, அதே நபரின் மடியில் அம்மா உட்காரவைக்கிறார். அம்மாவின் கட்டாயத்தின் பேரில், தனக்குத் தீங்கு செய்தவனின் மடியில் உட்கார்ந்த குழந்தைக்கு, இயலாமையினால் அவமானமாக போய்விட்டது. அம்மாவின் மீதான வெறுப்பு பன்மடங்கு ஆகிறது.

குழந்தை, இந்த நிகழ்ச்சியின் மூலம் கற்றுக்கொண்ட விஷயங்கள் இதுதான். தான் பாதுகாப்பாக இல்லை. தன்னுடைய அம்மா தனக்கு தீமைதான் செய்வார்.

குழந்தை பானு வளர்கிறாள். 21 வயதில் அம்மா பார்த்த மாப்பிள்ளையுடன் திருமணம் நடக்கிறது. திருமண வாழ்வில் மகிழ்சியாக வாழ முடியவில்லை. அம்மா பார்த்து வைத்த திருமணம் என்பதால் கணவரிடம் அதே வெறுப்பும் கோபமும் தொடர்கிறது.

ஆறுதல் தேடி வந்தபோது பானுவுக்கு வயது 25. அம்மா தனக்கு திருமணம் செய்து வைத்தது, தன் மீது இருந்த அன்பினால் என்பதும் தன்னுடைய கணவர் தன்னை நன்றாகக் கவனித்துக்கொள்வதால் அவர் மீதான வெறுப்பும் கோபமும் நியாமற்றது என்பதும் அவருடைய புத்திக்குத் தெரிந்தே இருந்தது. ஆனால், அதைச் செயற்படுத்த முடியவில்லை.

நமக்குத் தோன்றலாம், இது எளிதான விஷயம்தானே? இதை ஏன் பானுவால் செயற்படுத்த முடியவில்லை என்று.



எப்போதோ அத்துமீறிய நபரைப் பார்த்து, இப்போதும் பயப்பட வேண்டிய அவசியம் என்ன? இப்போது வளர்ந்துவிட்டோம் தானே? எதிர் எதிரே நின்று கேள்வி கேட்பது சாத்தியம் எனப் புத்திக்குத் தெரியும், ஆனால், செய்ய முடிவதில்லையே.

அதே போன்றுதான் பானுவுக்கும், 4 வருடங்கள் வாழ்ந்த பிறகு, கணவர் நல்லவர்தான் எனப் புரிகிறது. ஆனால், அம்மா பார்த்து வைத்தவர் என்பதால், அவரைப் பார்த்ததும் எரிச்சல் வருகிறது. ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வாழ்க்கையில் நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்திச் சென்ற சம்பவங்கள்,நமக்கு அவமானமானத்தை தந்து சென்ற நிகழ்வுகள், நம்மையும் மீறி நம்மைச் செயல்பட வைக்கும். ஏனென்றால், நமக்குப் பயன்தராத எண்ணங்களையும் சில பழக்கங்களையும் கற்றிருப்போம்.

சரி, இதில் இருந்துஎப்படி வெளியே வருவது?

முதலில் கற்றுக்கொண்ட அந்த விஷயங்களை மனதில் இருந்து அகற்ற வேண்டும். மீண்டும் புதிதாக, நமக்கு நன்மை தருபவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு கவுன்சிலிங் மற்றும் தெரப்பி முறைகளும் உதவி செய்கின்றன.

உதவிகேட்டுவந்த பானுவுக்கு, இப்போதும் அவருடைய அம்மாவின் கட்டாயத்தின் பேரில், இயலாமையினால்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற எண்ணம் மனதில் இருந்து அகற்றப்பட்டது. அவருடைய வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள அல்லது அவர் விரும்பும்படி அமைத்துக்கொள்ள அவருக்கு முழு உரிமையும் இருக்கிறது எனப் புதிதாக்க் கற்றுக்கொண்டார்.

அம்மா, தன்னை வற்புறுத்தி உட்கார வைத்த மடி வேறு. அம்மா, தன்னை திருமணம் செய்து கொடுத்த நபர் வேறு என்பதை தெரப்பி மூலமாக எளிதாக ஏற்றுக்கொண்டார். முடிவில் அவருடைய திருமண வாழ்வு என்பது அவர் முழுமனதுடன் எடுத்த தேர்வாக இருந்தது. மேலும் அம்மாவுடனான, கணவருடனான உறவை சீர்படுத்திக்கொண்டார்.

பாலியல்ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளான குழந்தைகளுக்கு, அவை மனதளவில் பெரிய பாதிப்பையே விட்டுச் செல்கின்றன. பெரியவர்கள் ஆனாலும் அதன் பாதிப்பிலிருந்து, எளிதில் வெளிவர முடிவதில்லை.

சில உடல்ரீதியான, உணர்வுரீதியான துன்பங்களும் அவ்வாறே. அவை தருகின்ற அதிர்ச்சியிலிருந்து, அவ்வளவு எளிதில் வெளி வர முடிவதில்லை.

இவற்றிலிருந்து மீண்டுவர தெரப்பி முறைகள் பரிந்துரைக்கப்பட்டாலும், தாமாகவே வெளிவர விரும்புபவர்கள், தங்களுடைய எண்ணங்களில் சில மாற்றங்களைச் செய்து முயற்சிக்கலாம். ஏனென்றால், காலம் காயங்களை ஆற்றும் என்பது இந்த மாதிரியான காயங்களுக்குப் பொருந்துவதில்லை.

முக்கியமாக, அந்தசம்பவம் கடந்துவிட்ட ஒன்று என்பதை நினைவில் வையுங்கள். இப்போது இந்தக் கணத்தில் வாழ்வதுதான் உண்மை என்பதையும், இந்தப் பொழுது தருகின்ற பாதுகாப்பையும் முழுமையாக உணருங்கள்.

இதில் உங்கள் தவறு எதுவும் இல்லை. அடுத்தவர் செய்த ஒரு தவறுக்கு நீங்கள் உங்களை இழிவாகவோ குறைவாகவோ கருத வேண்டியதில்லை. குற்ற உணர்வுக்கு இடமே இல்லை. உங்கள் மீதான அதிகாரம், உங்களிடம் மட்டுமே உள்ளது. எனவே அடுத்தவர் என்ன நினைப்பார்கள் என வருந்தாதீர்கள்.

இது குறித்துப்பேச ஆரம்பியுங்கள். உதவி தேடிச்செல்லும் போது,நீங்கள் இந்த விஷயங்களைப் பகிர்ந்துகொள்ளப் போகும் நபர், உங்கள் நம்பிக்கைக்குரியவரா எனவும் உங்களைப் பற்றி முழுவதுமாகத் தெரிந்துகொள்ள தகுதியுள்ளவர்தானா என்பதையும் உறுதி செய்தபின், அவரிடம் உங்களுக்கு நடந்ததைப் பற்றிச் சொல்லுங்கள். பேசும்போது ரகசியம் தரும் பாதிப்பின் வீரியம் குறையும்.

ஆமாம் நடந்துவிட்டது. அதனாலென்ன? உங்களுக்காக நீங்கள் எப்போதும் இருக்கிறீர்கள் எனச் சொல்லிக்கொள்ளுங்கள். உங்களுக்கு நிறைய நிறைய அன்பைத் தாருங்கள். உங்கள் அன்பு முழுவதும் முதலில் உங்களுக்குத்தான். அதற்கு நீங்கள் முற்றிலும் தகுதியானவர்.

நாம்கற்றுக்கொண்ட விஷயங்கள்எதுவாக இருந்தாலும், அவை எப்போது நம்முடைய வளர்ச்சிக்குத் துணை நிற்கவில்லையோ நமது வாழ்வில் மகிழ்ச்சியைத் தரவில்லையோ அப்போதே அதை அழித்துவிடவும், புதிதாக்க் கற்றுக்கொள்ளவும் நம்மை திறந்த மனதுடன் வைத்துக்கொண்டு, என்றென்றும் வாழ்வைக் கொண்டாடலாம்.

# மோடிக்கு இத்தாலி பிரதமர் புகழாரம்



'ஜி - 7' மாநாட்டுக்கு வந்த, ஐரோப்பிய நாடான, இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, பிரதமர் மோடியை சந்தித்து பேசினார். அவரை சந்தித்ததும் மகிழ்ச்சி பொங்க கைகுலுக்கிய மெலோனி, 'நீங்கள் தான் 'பெஸ்ட்' உங்களைப் போல மாற நான் முயற்சி செய்கிறேன்' என, கூறி சிரித்தார்.

அப்போது, பிரதமர் மோடியும் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டது. பொதுவாக, மோடி - மெலோனி சந்திப்பு இணையத்தில் எப்போதும் பேசுபொருளாக இருக்கும்.

அந்த வகையில், இருவர் பெயரையும் இணைத்து 'மெலோடி' என்ற 'ஹேஷ்டேக்' உடன் வேகமாக பரவி வருகிறது.

**மோடி - மார்க் கார்னி பேச்சு தூதர்களை நியமிக்க ஒப்புதல்!**

வட அமெரிக்க நாடான கனடாவில் நடந்த, 'ஜி - 7' மாநாட்டில் பங்கேற்க சென்ற பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் மார்க் கார்னியுடன் நேற்று பேச்சு நடத்தினார். காலிஸ்தான் பயங்கரவாதி நிஜ்ஜார் கொலை வழக்கில், இரு நாடுகள் இடையிலான உறவு மோசமடைந்த நிலையில், அதை மேம்படுத்தும் வகையில் இந்த பேச்சு அமைந்தது.

இது தொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை:கனடா பிரதமர் மார்க் கார்னியை, பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசினார். ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள இரு நாட்டு உறவுகளை மீட்டெடுப்பது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர்.

இரு தரப்பிலும் தூதரக அதிகாரிகளை நியமிப்பதற்கு இந்த சந்திப்பில் ஒப்புதல் மேற்கொள்ளப்பட்டது. ஜனநாயக மதிப்புகள், சட்டத்தின் ஆட்சிக்கு மரியாதை, இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டின் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கான உறுதிப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா - கனடா உறவு களின் முக்கியத்துவத்தை இரு தலைவர்களும் மீண்டும் உறுதிப்படுத்தினர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது, காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை குறித்து கேள்வி எழுப்பினீர்களா என பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, 'இந்த விவகாரம் நீதிமன்றத்துக்கு உட்பட்டு உள்ளதால், அது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது' என, கார்னி கூறினார். (ஐ)

## இஸ்ரேல் – ஈரான் இடையே தொடரும் குண்டு மழை இதுவரை 600க்கும் மேற்பட்டோர் பலி



இஸ்ரேல் - ஈரான் நாடுகள் குண்டுகளை வீசி பரஸ்பரமாக தாக்குதல் நடத்தி வரும் நிலையில், இதுவரையில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 600ஐ தாண்டியுள்ளது.

ஈரான், இஸ்ரேல் நாடுகளுக்கும் இடையேயான போர் கடந்த 13ம் தேதி தொடங்கியது. ஈரான் அணுசக்தி நிலையங்கள், ராணுவ நிலைகளை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும் இஸ்ரேல் மீது தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

6வது நாளாக போர் நீடித்து வரும் நிலையில், ஈரானை நிபந்தனையின்றி சரணடையுமாறு அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியிருந்தார். ஆனால், சமரசத்திற்கு வாய்ப்பே இல்லை என்று கூறி, ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதையடுத்து, மத்திய கிழக்கு நாடுகளில், அமெரிக்கா தனது போர் விமானங்களை குவித்து வருகிறது. போரை நிறுத்துமாறு பல உலக நாடுகள் அறிவுறுத்தி வரும் நிலையிலும், இருநாடுகள் தீவிர தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இஸ்ரேலில் உள்ள டெல்அவிவ் நகரில் 400 ஏவுகணைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட டிரோன்களைக் கொண்டும் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. டெல் அவிவ் மீது குயவவயா-1 ஹைப்பர்சோனிக் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. 2024ம் ஆண்டுக்குப் பிறகு, தற்போது முதல்முறையாக இந்தப் போரில் குயவவயா-1 ஹைப்பர்சோனிக் ஏவுகணை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் முழுவதும் 40 இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்காரணமாக 19,000க்கும் மேற்பட்ட பகுதிகள் சேதமடைந்துள்ளதாகவும், 3,800 மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்று விட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர். பதிலுக்கு டெஹ்ரான் மீது இஸ்ரேலும் தாக்குதலை நடத்தி வருகிறது.

இதுவரையில் நடந்த தாக்குதல்களில் ஈரானில் 585 பேர் உயிரிழந்துள்ளனர். 1,326 பேர் காயமடைந்துள்ளனர். அதேபோல, இஸ்ரேலில் 24 பேர் உயிரிழந்துள்ளனர். 1,300 பேர் படுகாயமடைந்துள்ளனர். (ஐ)

## 110 இந்திய மாணவர்கள் ஈரானில் இருந்து மீட்பு



இஸ்ரேல் - ஈரான் போர் தீவிரமடைந்ததை அடுத்து, அங்கு சிக்கி தவித்த, 110 இந்திய மாணவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்பை ஆதரிக்கும் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இரு தரப்பிற்கும் இடையே ஆறு நாட்களாக தொடர்ந்து மோதல் நிலவி வருகிறது.

அடுத்தடுத்து சீறிப் பாயும் ஏவுகணைகளால், மத்திய கிழக்கில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த சூழலில், ஈரானில் தங்கி பயிலும் இந்திய மாணவர்களை மீட்க, 'ஆப்பரேஷன் சிந்து' நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துள்ளது. இதற்கான பணிகளை ஈரான் மற்றும் அர்மேனியா நாட்டில் உள்ள இந்திய தூதரகங்கள் மேற்கொண்டுள்ளன.

முதற்கட்டமாக, ஈரானில் இருந்து, 110 இந்திய மாணவர்கள், பஸ்கள் வாயிலாக அண்டை நாடான அர்மேனியாவின் தலைநகரம் யெரெவானுக்கு அழைத்து வரப்பட்டனர். பின், அங்கிருந்து சிறப்பு விமானம் வாயிலாக நேற்று இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த விமானம் இன்று காலை டில்லி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் மீட்பிற்கு உதவிய ஈரான் மற்றும் அர்மேனியா நாடுகளுக்கு இந்தியா நன்றி தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, ஈரானில் உள்ள இந்தியர்கள் வெளியே வர வேண்டாம் என்றும், பாதுகாப்பாக இருக்கும்படியும் அங்கிருக்கும் நம் தூதரகம் அறிவுறுத்தி உள்ளது. (ஐ)

## பேஸ்புக், இன்ஸ்டா கணக்கு அவசியம் மாணவர்கள் விசாவுக்கு அமெரிக்கா போட்ட நிபந்தனைகள்




பல்வேறு புதிய கட்டுப்பாடுகளுடன் மாணவர்களுக்கான விசா வழங்கும் நடைமுறைகளை அமெரிக்கா மீண்டும் தொடங்கியுள்ளது. இந்தியா உள்பட பல்வேறு நாடுகளில் இருந்தும் கல்வி பயில்வதற்காக, அமெரிக்காவுக்கு லட்சக்கணக்கான மாணவர்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். இவர்களுக்காக மாணவர்கள் விசாவை அமெரிக்க வழங்கி வருகிறது. இந்த நிலையில், பல்வேறு புதிய கட்டுப்பாடுகளுடன் மாணவர்களுக்கான விசா வழங்கும் நடைமுறைகளை அமெரிக்கா தொடங்கியுள்ளது.

அதன்படி, மாணவர்கள் தங்களின் பேஸ்புக், எக்ஸ், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதள கணக்குகளின் விபரங்களை விண்ணப்பங்களில் குறிப்பிட வேண்டும் என்று தெரிவிக்கபட்டுள்ளது.

அவர்களின் சமூக வலைதளப் பக்க கணக்குகளின் பதிவுகளை அமெரிக்க அதிகாரிகள் ஆய்வு செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசுக்கோ, மக்களுக்கோ எதிராக பதிவுகளை பகிர்ந்துள்ளார்களா? என அவர்களின் சமூக வலைதளப் பக்க செயல்பாடுகளை ஆய்வு செய்ய உள்ளனர். இந்தியா, சீனா, மெக்சிகோ மற்றும் பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், அமெரிக்காவில் கல்வி பயில ஆவலுடன் எதிர்நோக்கியுள்ள நிலையில், இந்தப் புதிய நடைமுறைகள் அவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது .(ஐ)

## காரைநகர்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று காலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த கிருஷ்ணன் கோவிந்தராஜன் முன்மொழியப்பட்டார்.

சபையில் வேறு எந்த முன்மொழிவுகளும் இல்லாத நிலையில் கிருஷ்ணன் கோவிந்தராஜன் காரைநகர் பிரதேச சபையின் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற உப தவிசாளர் தெரிவின் போது தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்த ஆண்டிஐயா விஜயராஜா முன்மொழியப்பட்டார்.

சபையில் வேறு எந்த முன்மொழிவுகளும் இல்லாத நிலையில் தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்த ஆண்டிஐயா விஜயராஜா உப தவிசாளராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

11 உறுப்பினர்களைக் கொண்ட காரைநகர் பிரதேச சபையில், சுயேச்சைக் குழு, தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தலா இரண்டு உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் ஓர் உறுப்பினரும் நடந்து முடிந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் சுயேச்சைக் குழு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன ஆட்சி அதிகாரத்தை தலா 16 மாதங்கள் பங்கிடுவதற்கான எழுத்து மூல ஒப்பந்தத்தை நேற்று மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வலிகாமம்….

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

இலங்கைத் தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 5 ஆசனங்களையும் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இந்நிலையில், இன்றைய தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தியாகராஜா பிரகாஷ் முன்மொழியப்பட்டார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் கருணைநாதன் அபராசுதன் முன்மொழியப்பட்டார்.

பகிரங்க வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தியாகராஜா பிரகாஷ் 14 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட கருணைநாதன் அபராசுதன் 12 வாக்குகளையும் பெற்றனர். 5 உறுப்பினர்கள் வாக்களிக்காது நடுநிலை வகித்தனர்.

இதன் மூலம் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா பிரகாஷ் தெரிவானார்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட செல்வரத்தினம் உதயகுமாரன் தெரிவானார்.

## வலிகாமம் மேற்கு….

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

கூட்டம் இன்று வலிகாமம் மேற்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது. 26 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

இலங்கைத் தமிழரசுக் கட்சி 10 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன தலா 2 ஆசனங்களையும்,

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெற்றது. இதன்போது தவிசாளர் பதவிக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சண்முகநாதன் ஜெயந்தன் 15 வாக்குகளையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட தர்மலிங்கம் சுப்பிரமணியம் நந்தகுமார் 7 வாக்குகளையும் பெற்றனர். உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட கந்தையா இலங்கேஸ்வரன் தெரிவானார்.

## சங்குக்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவின் போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அறிவுறுத்தலுக்கு மாறாகச் செயற்பட்ட கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் மார்க்கண்டு குமாருக்குக் கட்சியின் பொதுச்செயலாளர் நா.இரட்ணலிங்கத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், "இன்று நடைபெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவின் போது கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக நீங்கள் எதிர்த்து வாக்களித்துள்ளீர்கள். ஆகையால் உடனடியாக அமுலுக்கு வரும்படியாக கட்சி உறுப்புரிமையில் இருந்து நீங்கள் இடைநிறுத்தப்படுகின்றீர்கள்.

தங்களது இந்த நடவடிக்கை சம்பந்தமான விளக்கம் ஏதும் இருப்பின் ஒரு வார காலத்துக்குள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும். இல்லையெனில் கட்சியில் இருந்தும் பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் உடனடியாக நீக்கப்படுவீர்கள்." - என்றுள்ளது.

இன்று இடம்பெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவின்போது தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சண்முகநாதன் ஜெயந்தனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தர்மலிங்கம் சுப்பிரமணியம் நந்தகுமாரும் முன்மொழியப்பட்டனர்.

இதன்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் மார்க்கண்டு குமார், இலங்கைத்தமிழரசுக்கட்சியின்தவிசாளர் வேட்பாளரான சண்முகநாதன் ஜெயந்தனுக்கு வாக்களித்திருந்தார்.

பின்னர் அவர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் சென்று தான் தவறுதலாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களித்து விட்டதாகவும், தனது வாக்கை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினருக்கு மாற்றுமாறும் கோரினார். எனினும், குறித்த வாக்கு பதியப்பட்டுவிட்டதாகவும், அதனை மாற்ற முடியாது எனவும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தெரிவித்தார்.

இதேவேளை, உப தவிசாளர் தெரிவின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருக்கு எதிராக மார்க்கண்டு குமார் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

## எந்தவொரு…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளை ஒடுக்கி தமது அரசியல் பயணத்தை முன்னெடுக்க அநுர அரசு முற்படுமானால் அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயார். இந்நாட்டில் எமது அரசியல் பயணம் தொடரும்.

ஐக்கிய தேசியக்கட்சியால் அடக்குமுறைக்கு உள்ளான கட்சிதான் ஜே.வி.பி. எனவே, அடக்குமுறையின் தாக்கம், அதனால் ஏற்படும் விளைவுகள் என்னவென்பன பற்றி தற்போதைய அரசுக்கு நன்கு தெரியும்." - என்றார்

# இலங்கையில் மக்களுக்கு அவசர அறிவுறுத்தல்

நுளம்பு பெருகுவதற்கான சூழல் காணப்படுமாயின் அது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு நாட்டில் பொது மக்களுக்கு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர அறிவுறுத்தியுள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், டெங்கு நோயினால் கடந்த ஆண்டில் மாத்திரம் நாட்டில் 14 மரணங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன், குறித்த காலப்பகுதியில் 26,775 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் பதிவு செய்யப்படுகின்றனர். நிலவும் மழையுடனான வானிலை காரணமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. நுளம்பு பெருகுவதற்கான சூழல்

எனவே, தங்களது குடியிருப்புகள் மாத்திரமன்றி பணியிடங்கள், மதஸ்தலங்கள் மற்றும் தங்களது பிள்ளைகள் செல்லும் பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் நுளம்பு பெருகுவதற்கான சூழல் காணப்படுமாயின், அது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும்.

வாரத்திற்கு ஒருமுறையேனும் சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தி டெங்கு நுளம்புகள் பரவுவதனை கட்டுப்படுத்த வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

# கெஹலியவின் மற்றைய இரண்டு மகள்களும் மருமகனும் கைதாகிப் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 19

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று வியாழக்கிழமை முற்பகல் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய இரு மகள்களையும் மருமகனையும் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய இரு மகள்களும் மருமகனும் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று சரீர பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

134 மில்லியன் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள சொத்து விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகக் கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய இரு மகள்களும் மருமகனும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று காலை முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் ஒரு மகள் ஆகியோர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் ஒரு மகள் ஆகியோர் நேற்று சொத்து விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதால் கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் பிணை நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றியதால், நீதிமன்ற உத்தரவின் கீழ் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# முல்லைத்தீவில் மீனவர் மாயம்

முல்லைத்தீவு, ஜூன் 19

முல்லைத்தீவு, தீர்த்தக்கரை கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல்போயுள்ளார். அவரின் படகு நடுக்கடலில் மீட்கப்பட்டுள்ளதுடன் அவரைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இன்று அதிகாலை முல்லைத்தீவு, கள்ளப்பாடு, தீர்த்தக்கரைப் பகுதியில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்ற வேளை படகு ஒன்று நடுக்கடலில் தனியாக யாருமற்ற நிலையில் மிதந்து வந்துள்ளது. அந்தப் படகில் காணாமல்போன மீனவரின் சாரம் காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து மேற்படி மீனவரின் உறவினர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மீனவரை 8 படகுகளில் தேடும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான வின்சன்டிப்போல் அருமைராசா என்பரே காணாமல்போயுள்ளார்.

# மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி செம்மணியில் நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டம் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் செம்மணிப் பகுதியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.06.2025 வெளியிடப்பெற்றது.